https://arimanokku.com/ UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

Published on 14, December -2024 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# ஒப்பியல் நோக்கில் இலக்கியக் காஞ்சி நகர வடிவமும் சாஸ்த்திரம் கூறும் நகர வடிவமும் ஒரு பார்வை

முனைவர் த. தட்சணா மூர்த்தி
செயிண்ட். ஸ்டீபன் கல்லூரி
தில்லி

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் ஆண்ட காலங்களில், தமிழகத்தின் சில பகுதிகளை ஆட்சி செய்தவர்கள் தொண்டையர்கள் ஆவர். தமிழகத்தின் வடகிழக்குப் பகுதியிலுள்ள மாமல்லபுரம், காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் இன்றைய தமிழகத் தலைநகரமாகிய சென்னை முதல் வடக்கில் திருப்பதி, தெற்கில் தென் பெண்ணை ஆறு, மேற்கில் பவள மலை, கிழக்கில் வங்கக் கடல் உள்ளிட்ட நிலப்பரப்பு தொண்டை நாடு எனப்படுகிறது. இப்பகுதிகளை ஆண்டவர்கள் தொண்டையர் அல்லது பல்லவர் எனப்படுகின்றனர். தொண்டை நாட்டின் தலைநகரமாகக் காஞ்சிபுரம் திகழ்ந்துள்ளது. தற்காலத்து ஆந்திர மாநிலத்தில் உள்ள குண்டூர் வரை தொண்டை நாடு பரவி இருந்தது என்பர். பழந்தமிழ் இலக்கியங்களில் தொண்டை நாட்டின் ஊர்கள், நகரங்கள், மாநகரங்கள் குறித்த சொல்லாடல் வெகுவாகப் பதிவாகியிருக்கிறது. அவற்றின் வழி அக்காலத்து நகரவடிவமைப்பிணை நகரமைப்பு நூல்கள் கூறும் வடிவமைப்போடு ஒப்பிட்டு விளக்கும் வகையினில் இக்கட்டுரை அமைகிறது.

## பழங்கால நகர அமைப்பு

பழங்காலத்தில் ஒரு இருப்பிடத்தை உருவாக்கும் பொழுது நம் முன்னோர்கள் பல்வேறு வகைகளில் ஆராய்ச்சி செய்தனர். அவ்விடத்தின் இயற்கைச்சூழல் அமைப்பு, பருவ கால மாற்றம், மண்ணின் தன்மை, நிலத்தடி நீரின் அளவு, போன்ற காரணிகளை உற்றாய்ந்து அதன் பின்னரே தங்கள் வாழிடங்களைக் கட்டமைத்தனர். ஒரு பெரிய நகரை/தலைநகரை உருவாக்கும் பொழுது இவ்விதிகள் யாவும் அக்காலங்களில் மிக கவனமாக கையாளப்பட்டன. இதனோடு தலைநகருக்குரிய இன்றியமையா உறுப்புகளான மதில், அகழி, மிளை(காவற்காடு), அகன்ற வாயில், பெரிய வன்மையான கதவு போன்றனவும் சிறப்புற அமைக்கப்பட்டன. இவ்வகையாக கட்டமைக்கப்படும் ஓர் இருப்பிடத்தினை சில வடிவ அமைப்புகளோடு ஒப்புமைப்படுத்தி அதனைப் போன்று வடிவமைத்தனர். இன்று வீடு கட்டும் முன் வரையப்படும் படம் போல. அவ்வகையினில் ஊரமைக்கப்படும் நகர வடிவமைப்புகளை வாஸ்த்து சாஸ்த்ரா, மானசாரா, மயமதா, சில்பரத்னா, விஸ்வகர்மா போன்ற நூல்கள் குறிக்கிறது. அவ்வடிவினில் ஒன்றாக விளங்குவது பத்மம் ஆகும். பத்ம நகர அமைப்பானது, கிழக்கு மேற்கான போக்குடைய வழிகள் ஏழும், தெற்கு வடக்காக செல்லுகிற வழிகள் மூன்று முதல் ஏழு வரையிலும் அமையின் அது ‘பத்மம்’ எனப்படும். பத்மமாவது தாமரைப்பூ ஆகும். இதனை பழந்தமிழர் கட்டடக் கலையும் நகரமைப்பும் எனும் நூலில் கூறியுள்ளார். (பார்த்தசாரதி 1992 :147)

## கச்சி

பழங்காலத்தில் தொண்டையர்களின் தலைநகரமாகக் காஞ்சிபுரம் விளங்கியது. சங்கக் கவிதைகளில் காஞ்சி மாநகர் ‘கச்சி’ எனக் குறிப்பிடப்படுகிறது. மணிமேகலையில் ஒரு காதை ‘கச்சி மாநகர்’ என்ற பெயர் தாங்கி அமைந்திருப்பது

குறிப்பிடத் தகுந்தது. அக்காதையினுள்ளும்/பிற காதைகளிலும் கச்சி, 'காஞ்சி' எனக் குறிப்பிடப் பெற்றுள்ளது. காஞ்சி எனும் சொல்லானது சங்கக் கவிதைகளில் காஞ்சி மரத்தினையும், புறத்துறையையும் குறிக்கின்றது. ஆயின் பெரும்பாணாற்றுப் படையிலும், மணிமேகலைக் காப்பியத்தி லும் இடம்பெற்றிருக்கும் காஞ்சி என்ற சொல் கச்சி நகரையே குறிக்கிறது.

*அடங்காத் தானையொடு உடன்று மேல்வந்த*

***ஒன்னாத் தெவ்வர் உலைவிடத்து ஆர்த்து***

***கச்சியோனே, கைவண் தோன்றல்***
(பெ.ஆ.ப. 418-20)

*பொன்னெயிற் **காஞ்சி** நகர்கவி னழிய*
(ம.மே. 21:148)

*செறிதொடி **காஞ்சி** மாநகர் செற்குவை*
(ம.மே. 21: 154)

*பொன்னெயிற் **காஞ்சி** நாடு கவினழிந்து*
(ம.மே. 28: 156)

காஞ்சி மாநகரம் வஞ்சி நகரத்திற்கு வடக்குத் திசையில் அமைந்திருந்தது. வஞ்சி நகரத்தில் இருந்து மணிமேகலை மாசாத்துவனை வணங்கி விடைபெற்றுக் கொண்டு கச்சி மாநகருக்குச் செல்லும் காட்சியினை மணிமேகலையில் சீத்தலைச் சாத்தனார் கீழ் வருமாறு விவரிக்கிறார்.

*கொடிமதின் மூதூர்க் குடக்கணின் றோங்கி*

*வடதிசை மருங்கின் வானத் தியங்கித்*

*தேவர் கோமான் ஆவான் மாநகர்*

*மண்மிசைக் கிடந்தென வளந்தலை மயங்கிய*

*பொன்னகர் வறிதாப் புல்லென் றாயது*

*கண்டுளங் கசிந்த வொண்டொடி நங்கை*

*பொற்கொடி மூதூர்ப் புரிசை வலங்கொண்டு*

*நடுநக ரெல்லை நண்ணின ளிழிந்து*
(ம.மே. 28: 164-71)

கொடிகளையுடைய மதில் சூழ்ந்த பழைமை மிக்க வஞ்சி நகரத்தின் மேற்றிசையினின்றும், எழுந்து வடதிசைப் பக்கமாக விசும்பிற் சென்று, தேவர்களு க்கு அரசனான இந்திரன் அரசு புரியும் அமராவதி நகரே நிலவுலகில் வந்து இருந்தது போல வளம் சிறந்திருந்த, அழகிய நகரமான கச்சி மாநகரம் வறுமையாற் பொலிவிழந்து இருந்த தன்மையைக் கண்டு மனம் கசிந்தனள் மணிமேகலை. அழகிய கொடியினையு டைய அத்தொல் நகரத்தின் மதிலை வலம் வந்து, நடுவூரின் எல்லையை அடைந்தாள் அவள் என மணிமேகலைக் காப்பியம் பகர்கிறது. இக்காஞ்சி நகரம் தொண்டையர்களின் தலைநகரம் ஆதலால் இங்கு காவற்காடு (மிளை), அகழி, மதில், பெரிய வாயில், அங்காடிகள், பெரிய தேர் செல்லத்தக்க அகன்ற தெருக்கள், பல தொழில் புரியும் மக்கள் வாழும் குடியிருப்புகள் என்பன கொண்டு நகரமைப்பு நூல்கள் வரை விலக்கணத்திற்குத் தக அமைந்திருந்தன.

*காழோர் இகழ்பதம் நோக்கி கீழ….*

*நெடுங்கை யானை நெய்ம்மிதி கவளம்*

*கடுஞ்சூல் மந்தி கவரும் காவில்*

*களிறுகதன் அடக்கிய வெளிறில் கந்தின்*

*திண்டேர் குழித்த குண்டுநெடுந் தெருவில்*

*படைதொலை பறியா மைந்துமலி பெரும்புகழ்,*

*கடைகால் யாத்த பல்குடி கெழீஇக்*

*கொடையும் கோளும், வழங்குநர்த் தடுத்த*

*அடையா வாயில் மிளைசூல் படப்பை*
(பெ.ஆ.ப. 393-401)

தொண்டையர்கள் யானைப்படை அதிகம் கொண்டிருந்தனர். இச்செய்தி மேற்சொன்ன கவிதைத் தொடர்களில் இடம்பெற்றிருக்கக் காணலாம். காஞ்சி மாநகரம் சோலைகள் நிறைந்திருந்தது. அச்சோலைகளில் யானைகளுக்குக் கவளங்கள் வழங்கப்பட்டன. அந்நகரில் சினம் கொண்ட ஆண் யானைகளைக் கட்டுப்படுத்தும் விதமாகக் காழ் முற்றிய தறிகள் இருந்துள்ளன. திண்மையான தேர்கள் பல முறை ஓடியமையால் நெடிய தெருக்கள் குண்டும் குழியுமாக இருந்தன. போர்க்காலத்தில் எதிரிப் படைகளுக்கு அஞ்சிப் புறமுதுகிடாத வலிமை மிக்க மறவர்களின் குடியிருப்பு கள் இருந்தன. காஞ்சியில் பொருள்களை விற்பவரும், அதனை வாங்குவோரும் நிறைந்த அங்காடித் தெருக்கள் பல இருந்தன. காஞ்சி மாநகரம், பரிசில் வேண்டி வருவோருக்கு எப்பொழுதும் திறந்த வாயிலைக் கொண்டிருந்தது. அதன் பக்கங்களில் அடர்ந்த காவற் காடுகள் இருந்தன. இம்மாநகர் சுட்ட செங்கற்களால் கட்டப்பட்ட வீடுகளைக் கொண்டிருந்தன. அந்நகரம் பொன்னென

ஒளிர்ந்திருந்தது. அதனால், *“பொன்னெயிற் காஞ்சி நாடு”* (ம.மே.28:156), *“பொன்னகர்”* (ம.மே.28:168) என்று குறிப்பிடப் படுகிறது.

இக்காஞ்சி மாநகரின் அமைப்பு நகரமைப்பு நூல்கள் கூறும் (பத்ம) தாமரை வடிவ அமைப்பை ஒத்திருந்தது. அதனை, கீழ் வரும் பெரும்பாணாற்றுப் படைக் கவிதைத் தொடர்களில் அம் மாநகரின் வடிவமைப்பு விவரிக்கப் பட்டிருப்பது காண்க.

*நீனிற உருவின் நெடியோன் கொப்பூழ்*

*நான்முக ஒருவற் பயந்த பல்லிதழ்த்*

*தாமரைப் பொகுட்டின் காண்வரத் தோன்றி*

*சுடுமண் ஓங்கிய நெடுநகர் வரைப்பின்*

*இழுமென் புள்ளின் ஈண்டுகிளைத் தொழுதிக்*

*கொழுமென் சினைய கோளி யுள்ளும்*

*பழமீக் கூறும் பலாஅப் போல*

*புலவுக் கடலுடுத்த வானம் சூடிய*

*மலர்தலை உலகத் துள்ளும் பலர்தொழ*

*விழவு மேம்பட்ட பழவிறல் மூதூர்*
(பெ.ஆ.ப. 402-11)

காஞ்சி மாநகர் செங்கற்களால் கட்டப் பட்ட உயர்ந்த மதிலைக் கொண்டிருந் தது. இது நீல நிறத் திருமாலின் திருவுந்தியில் நான்முகன் அமர்ந்திருக்கும் பல்லிதழ் தாமரை மலரின் நடுவில் உள்ள பொகுட்டினை ஒத்த அமைப்பினைக் கொண்டிருந்தது. எப்போதும் இழுமென ஒலிக்கும் கடல் சூழ்ந்து அகன்ற உலகத்து நகரங்களில் எல்லாம் சிறந்த ஒன்றாகக் காஞ்சி மாநகரம் விளங்கியது. அக்கடற்புரமா னது, இனிமை மிக்க பழுத்த பலா மரத்தை மொய்க்கும் பறவைத் திரள் அனைய புலால் நாற்றம் வீசிக் கொண்டிருந்தது. இம்மாநகர், எல்லாச் சமயத்தாரும் கொண்டாடி மகிழும் விழாக்கள் பல கொண்டதாகவும், பழம் பெருமையும், வெற்றிச் சிறப்பு மிக்க தாகவும் விளங்கியது. நகரமைப்பு வரைவிலக்கண நூல்கள் கூறும் ‘பத்மம்’ (தாமரை) என்ற வடிவமைப்பு கொண்டதாகக் காஞ்சி மாநகர் விளங்கியது.

இந்நகரின் எழில் தோற்றத்தைத் தண்டிய லங்கார ஆசிரியர் இயைபுஉருவகத்தின் உதாரணப்பாடல் வழி கீழ் வருமாறு உருவகித்திருப்பது மனங்கொளத்தக்கது.

*ஏரி யிரண்டுஞ் சிறகா வெயில்வயிராக்*

*காருடைய பீலி கடிகாவா – நீர்வண்ணன்*

*அத்தியூர் வாயா வணிமயிலே போன்றதே*

*பொற்றோரன் கச்சிப் பொலிவு*
(த.அ. 1920:62)

காஞ்சி மாநகரின் இருபுறத்து ஏரிகள் இரண்டு அமைந்திருந்தன. இவை மயிலின் இருதோகைகளாகக் காட்சியளி க்கின்றன. இந்நகரின் கோட்டை மதில் மயிலின் வயிறாகப் புலப்படுகிறது. நீர்வண்ணன் அத்தியூர் மயிலின் வாயாக அமைந்திருக்கிறது. பண்டைய நகரமை ப்பு வகைகளில் காஞ்சி மாநகரம் மயூர (மயில்) வகையில் அமைந்திருந்தது.

காஞ்சிநகரத்து மன்னனின் அரண்மனை முற்றமானது பல நாட்டு மன்னர்கள் திரையாகக் கொடுத்த பொருள்களால் நிறைந்திருந்தது. தொடர்ந்து வந்த வண்ணம் இருந்த மன்னர்கள் அரண் மனைக்கு உள்ளே செல்ல இடமின்றி வெளிப்புறத்தில் காத்திருந்தனர். கடத்தற் கரிய கங்கையாற்றைக் கடக்க ஒற்றைத் தோணிக்காகக் காத்திருக்கும் மக்களின் மனநிலை அனைய அங்குக் காத்திருந்த வர்களின் மனநிலை ஏங்கி இருந்தது.

*பொன்கொழித்து இழிதரும் போக்கருங் கங்கைப்*

*பெருநீர் போகும் இரியல் மாக்கள்*

*ஒருமரப் பாணியில் தூங்கியாங்கு*

*தொய்யா வெறுக்கையோடு துவன்றுபு குழீஇ,*

*செவ்வி பார்க்கும் செழுநகர் முற்றத்து*
(பெ.ஆ.ப. 431-35)

இதே பெரும்பாணாற்றுப்படை (440) காஞ்சி மன்னனின் அரண்மனையைப் *“பொன்துஞ்சு வியனகர்”* என்றும் சுட்டுகிறது. இச்செய்திகள் நீங்கலாகக் காஞ்சி நகரின் தெரு அமைப்பு, வீடுகளின் தோற்றம் உள்ளிட்ட செய்திகள் ஏதும் பழந்தமிழ் இலக்கியங்களில் பதிவாகவில்லை.

**திருவெஃகா**

காஞ்சி மாநகரத்தை ஒட்டிக் காவற் காட்டிற்கு வெளிப்புறம் அமைந்த ஓர் ஊர் திருவெஃகா ஆகும். இது பெரும்பாணாற்றுப்படையில் குறிப்பிடப் படுகிறது. இது புகழ் சான்ற திருமால் திருப்பதி ஆகும். திருமாலின் நூற்றெட்டுத் திருப்பதிகளுள் இதுவும் ஒன்று.

இத்திருப்பதியில் திருமால் அரவணையிற் பள்ளிகொண்ட கோலத்தோடு எழுந்தருளி உள்ளார்.

*பாப்பணைப் பள்ளி அமர்ந்தோன் ஆங்கண்,*

*வெயில் நுழைபு அறியா குயில்நுழை பொதும்பர்*

*குறுங்காற் காஞ்சி சுற்றிய நெடுங்கொடி*
*(பெ.ஆ.ப. 373-75)*

திருவெஃகாவில் கதிரவனின் கதிர்கள் நுழைய முடியாத அளவிற்கு உயர்ந்த மரங்கள் செறிந்த சோலைகள் அடர்ந்து இருந்தன. குயில்கள் மட்டும் நுழைந்து செல்லும்படியாகக் காஞ்சி என்னு மரத்தினை நெடிய கொடிகள் சுற்றிப் படர்ந்திருந்தன. ஓங்கி உயர்ந்து வளர்ந்தி ருந்த காஞ்சி மரங்களால் வெயில்கூட நுழைய முடியாத நிலையில் அடர்ந்த சோலைகள் கொண்ட காவற்காடு எனப்படும் ஊரின் புறப்பகுதியாகவே இருக்கும் எனக் கருதலாம். இப்பெருமாள் கோவிலுக்கு அருகில் வெஃகா என்ற வேகவதி ஆறு பாய்ந்து கொண்டிருந்தது. அவ்வாறு இப்பொழுது தெற்கில் மூன்றரைப் பல்லாங்கு தூரம் தள்ளிப் பாய்கிறது. ஆற்றின் பெயர் அவ்வாறு பாய்ந்த இடத்தில் அமைந்த கோவிலுக்குப் பெயராகியது போலும் என்ற இராசமாணிக்கனாரின் பத்துப்பாட்டு ஆராய்ச்சி நூலின் கருத்து (2012: 132) எண்ணத் தகுந்தது.

## நாள் மகிழ் இருக்கை மற்றும் நீர்த்துறை

இந்தத் திருவெஃகாவில் நாள் மகிழ் இருக்கை ஒன்று இருந்துள்ளது. நகரமைப்பு நூல்கள் கூறும் விதிப்படி இளஞ்சோலைகள், பூங்காக்கள், பொழுது போக்குக்கான இடங்கள், நீர்த்துறைகள் முதலியன கொண்டு ஓர் ஊர் அமைய வேண்டும். காஞ்சி மாநகரத்தின் புறப் பகுதியாக அமைந்த திருவெஃகா இவ்வரைவிலக்கணத்திற்கு ஓர் எடுத்துக் காட்டாக அமைந்திருந்தது.

*....... ....... ....... நாளும்*

*பெருமகிழ் இருக்கை மரீஇ சிறுகோட்டுக்*

*....... ....... ....... .......*

*மடவரல் மகளிரொடு பகல்விளை யாடி*

*பெறற்கரும் தொல்சீர்த் துறக்கம் ஏய்க்கும்*

*பொய்யா மரபின் பூமலி பெருந்துறை*
*(பெ.ஆ.ப. 382-89)*

தமிழகத்தின் பல்வேறு திசைகளில் இருந்து பிற ஊர்களுக்கும், நகரங்களுக் கும் செல்வோர்க்குக் காஞ்சி மாநகரம் ஒரு முக்கிய வாயிலாக இருந்திருக்கிறது. வேறு ஊர்களுக்குச் செல்வோர் களைப்பு நீங்கத் தங்கியிருந்து செல்லும் இடம் ஒன்று காஞ்சி நகரின் புறத்தில் இருந்துள்ளது. இது நாள் மகிழ் இருக்கை எனப்படுகிறது. நாள்மகிழ் இருக்கையில் தங்கி, தம் மகளிரொடு பகற்பொழுது மக்கள் விளையாடி மகிழ்ந்துள்ளனர். இளவேனில் காலத்தில் நீர்ப்பூக்கள் நிறைந்திருக்கும் பெரிய நீர்த்துறை கொண்டு இன்பம் அளிக்கவல்லதாக இந்நாள் மகிழ் இருக்கை இருந்தது. அவ்வின்பமானது பெறுதற்கரிய வீடுபேற்று இன்பத்தை ஒக்கும். அத்திருவெஃகாவில் திருமால் பள்ளி கொண்டிருந்தார்.

## முடிவுரை

தொண்டையர்களின் தலைநகரமாக விளங்கிய காஞ்சி மாநகரம் திட்டமிட்டு கட்டமைக்கப்பட்ட ஒரு நகரம் என்பது தமிழ் இலக்கியப் பாடல்கள் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது. அந்த எழில் மிகு நகரினை கண்ட புலவர்கள் தாமரைக்கும், மயூரத்திற்கும் ஒப்புமைப் படுத்தியுள்ளனர். பழங்காலத்தில் இது போன்று எதிர்காலச் சிந்தனையோடு தக்க வசதிக்கூறுகளோடு பெரிய நகர்களை கட்டமைத்திருந்தனர் என்பது புலனாகிறது.

## துணை நூற்கள்

1. *பத்துப்பாட்டு (பகுதி 1)*, 2007, பொ.வெ. சோமசுந்தரனார் (உ.ஆ), சென்னை: திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.
2. *பத்துப்பாட்டு (பகுதி 2)*, 2008, பொ.வெ. சோமசுந்தரனார் (உ.ஆ), சென்னை: திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.
3. *மணிமேகலை*, 2015, ந.மு. வேங்கடசாமி நாட்டார், ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை, (உ.ஆ), சென்னை: சாரதாப் பதிப்பகம்.
4. *சிலப்பதிகாரம்*, 2014, ந.மு. வேங்கடசாமிநாட்டார் (உ.ஆ), சென்னை: ராமையா பதிப்பகம்.
5. பார்த்தசாரதி, நா., 1992, *பழந்தமிழர் கட்டடக் கலையும் நகரமைப்பும்*, சென்னை: தமிழ்ப் புத்தகாலயம்.
6. ஸ்ரீ சுபிரமணிய தேசிகர்(உ.ஆ), 1920, *தண்டியலங்காரம்*, சென்னை: மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலை.